Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**மாகாணக் கல்வித் திணைக்களம், சபரகமுவ – வாராந்தப் பாடசாலை**

தரம் : 6 | பாடம் : கணிதம் | வாரம் : 22

**அலகு :- தசமம்**

**பாடவேளைகளின் எண்ணிக்கை : 06**

- கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு உருவிலும் நிழற்றப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.



**1 ஐ 10 சம கூறுகளாகப் பிரித்து எடுக்கும் ஒரு கூறு $\frac{1}{10}$ ஆகும்.**
**$\frac{1}{10}$ ஐ வேறு ஒரு முறையில் 0.1 என எழுதலாம்.**

- பாடப்புத்தகத்தில் 11, 12 ஆம் பக்கங்களை நன்றாக விளங்கிக் கொள்க.
- தசம எண் ஒன்றின் ஒன்றினிடத்து இலக்கம், தசமப் புள்ளி, முதலாம் தசமதானத்து இலக்கம் என்பவற்றை தெளிவாக அறிந்து கொள்க.

கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| எண் | சொற்களில் எழுதும் முறை |
|---|---|
| 0.2 | |
| 0.5 | |
| 1.7 | |
| 2.8 | |
| 13.4 | |

கீழுள்ள தசம எண்களை எண்சட்டத்தில் வகைக்குறிக்க.

உதா :- 21.3




1) 0.3 2) 1.4 3) 13.2 4) 21.5

பாடப்புத்தகத்தின் 13 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 13.1 ஐப் பூரணப்படுத்துக. ஏற்படும் பிரச்சினைகளை தெளிவாக்கிக் கொள்ள ஆசிரியரின் / ஆசிரியையின் உதவியைப் பெற்றுக் கொள்க.

உருவில் நிழற்றப்பட்டுள்ள A, B, C இனால் காட்டப்படும் பகுதிகள் முழு உருவின் பின்னமாக எழுதுக.




A = ................

B = ..................

C = ..................

**1 ஐ 100 சம கூறுகளாகப் பிரித்து எடுக்கும் ஒரு கூறு $\frac{1}{100}$ ஆகும்.**
**$\frac{1}{100}$ ஐ வேறு ஒரு முறையில் 0.01 என எழுதலாம்.**

- பாடப்புத்தகத்தில் 14, 15 ஆம் பக்கங்களை நன்றாக விளங்கிக் கொள்க.

அதன்படி கீழுள்ள எண்ணில் ஒவ்வொரு இலக்கத்தினதும் இடத்தினை சரியாக விளங்கிக் கொள்க.




கீழே தரப்பட்டுள்ள தசம எண்ணை எண்சட்டத்தில் வகைக்குறிக்க.

உதா : - 21.34



1) 13.21 2) 24.01 3) 12.23 4) 41.04

கீழுள்ளவற்றில் தொகுதி **A** இலுள்ள ஒவ்வொரு பின்னத்திற்கும் உரிய தசம எண்களை தொகுதி **B** இலிருந்து தெரிந்து இணைக்க.

| A | B |
|---|---|
| $\frac{7}{10}$ | 0.02 |
| $\frac{2}{100}$ | 0.7 |
| $\frac{3}{10}$ | 0.2 |
| $\frac{7}{100}$ | 0.3 |
| $\frac{2}{10}$ | 0.07 |

பாடப்புத்தகத்தில் 17 ஆம் பக்கத்திலுள்ள உதாரணம் 1 ஐ சரியாகக் கற்றுக் கொள்க. அப்பக்கத்திலேயுள்ள செயற்பாடு 1 ஐப் பூரணப்படுத்துக.

பாடப்புத்தகத்தின் 17 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 13.2 ஐப் பூரணப்படுத்துக. ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.

- பாடப்புத்தகத்தில் 19, 20 ஆம் பக்கங்களை நன்றாக விளங்கிக் கொள்க. அதன்படி கீழுள்ள எண்களை < ஐ அல்லது > ஐ இட்டு தொடர்புபடுத்துக.

கூடியது > குறைந்தது

1) $\frac{1}{10}$ ........ $\frac{3}{10}$ 2) $\frac{5}{10}$ ........ $\frac{7}{10}$ 3) $\frac{7}{10}$ ........ $\frac{5}{10}$

4) $\frac{12}{100}$ ........ $\frac{25}{100}$ 5) $\frac{3}{100}$ ........ $\frac{5}{100}$ 6) $\frac{18}{100}$ ........ $\frac{9}{100}$

பின்வரும் தசம எண்களை பத்தின் பங்குகளாகக் காட்டி ஒப்பிடுக.

உதா :- 0.3 , 0.7

$0.3 = \frac{3}{10}$ , $0.7 = \frac{7}{10}$

$\frac{3}{10} < \frac{7}{10}$ என்பதால் 0.3 < 0.7 ஆகும்.

1) 0.4 , 0.6 2) 0.2 , 0.3 3) 0.8 , 0.7 4) 0.5 , 0.4

பின்வரும் தசம எண்களை பத்தின் பங்குகளாகக் காட்டி ஒப்பிடுக.

உதா :- 0.25 , 0.34

$0.25 = \frac{25}{100}$ , $0.34 = \frac{34}{100}$

$\frac{25}{100} < \frac{7}{10}$ என்பதால் $0.25 < 0.34$ ஆகும்.

1) 0.35 , 0.53 2) 0.12 , 0.32 3) 0.03 , 0.05 4) 0.07 , 0.09

0.5 , 0.25 ஆகியவற்றை ஒப்பிடுக.

$0.5 = \frac{5}{10}$ $0.25 = \frac{25}{100}$

$\frac{5}{10} = \frac{5 \times 10}{10 \times 10} = \frac{50}{100}$

$\frac{25}{100} < \frac{50}{100}$ என்பதால் $0.25 < 0.5$ ஆகும்.

பின்வரும் தசம எண்களை ஒப்பிடுக.

1) 0.7 , 0.12
2) 0.5 , 0.85
3) 0.4 , 0.35
4) 0.65 , 0.9

பாடப்புத்தகத்தில் 21 ஆம் பக்கத்திலுள்ள உதாரணம் 1, 2, 3 என்பவற்றைச் சரியாகக் கற்றுக் கொள்க.

பாடப்புத்தகத்தின் 22 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 13.3 ஐப் பூரணப்படுத்துக. ஏற்படும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு முயற்சிக்கவும்.

தசம எண் ஒன்றுடன் மற்றுமொரு தசம எண்ணைக் கூட்டுதல் தொடர்பாக தெளிவு பெற்றுக் கொள்க.

உதா :- 0.3 + 0.5

$\frac{3}{10} + \frac{5}{10} = \frac{8}{10} = 0.8$

$0.3 + 0.5 = 0.8$

1) 0.7 + 0.1 2) 0.2 + 0.5 3) 0.4 + 0.3 4) 0.2 + 0.6

$$
\begin{array}{r}
2.35 \\
+\ 1.41 \\
\hline
3.76 \\
\hline\hline
\end{array}
$$

24 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 13.4 ஐப் பூரணப்படுத்துக.

25 ஆம் பக்கத்திலுள்ள தசம எண்களைக் கழித்தல் தொர்பாகக் கற்றுக் கொள்க.

**தசம எண்களைக் கூட்டும் போதும் கழிக்கும் போதும் அவ்வெண்களின் ஒவ்வொரு ஒத்த இடத்தினதும் இலக்கங்களினால் வகைக்குறிக்கும் பெறுமதியைக் கருதி கூட்ட அல்லது கழிக்க வேண்டும்.**

26 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 13.5 ஐப் பூரணப்படுத்துக. உமக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.